FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8213009

1. District : மாவட்டம் Chennai | PS: காவல்நிலையம் VEAC, CC-I | Year: ஆண்டு 2025 | FIR No.: மு.த.அ. எண் 6/2025/AC/CC-I | Date: நாள் 16.10.25

2. (i) Act சட்டம்: Prevention of Corruption | Sections பிரிவுகள்: u/s 7
   (ii) Act சட்டம்: Act (Amendment) 2018 | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 18.09.2025 | Date from : நாள் முதல் 16.30 hrs | Date to : நாள் வரை 18.30 hrs
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.09.2025 | Time : நேரம் 20.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o the Asst. Executive Engineer 110/33-11 KV, Ponur Sub station Kunnathur Road, Ponur, Ch-116 9 k.m, South west
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. V. Thiruvenkadam | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி District Inspection Cell officer, O/o District Inspection Cell office Collectorate Campus, Chennai-600001

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tmt. A. Thamarai selvi, Assistant Engineer, Ponur (Rural), TNEB, CH-116
   2) Tr. S. Mohanarangan, Foreman, O/o AE, Ponur, TNEB, CH-116
   3) Tr. M. Raju, Foreman (Grade-I), O/o AE, Ponur, TNEB, CH-116

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

enclosed

Separate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Immanuel

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 16.10.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 21.00hrs.

Name: பெயர் A. Immanuel Gnana Sekar
Rank: நிலை Deputy Superintendent of Police
Vigilance & Anti-Corruption
Chennai City-I Dett.
Alandur, Chennai-16

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I குற்ற எண்.6/2025, பிரிவு-7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (2018)-ல் திருத்தப்பட்டது வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்-12 -ன் தொடர்ச்சி பின்வருமாறு.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகரபிரிவு -I -ன் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.A. இம்மானுவேல் ஞான சேகர், காவல் துணைக் கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு -I, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை -16 ஆகிய நான் 16.10.2025 அன்று மாலை 15.00 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்த போது, கடந்த 18.09.2025 -ந்தேதி திரு.V.திருவேங்கடம், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சென்னை-600 001 என்பவரிடமிருந்து பெற்ற புகார் மனுவினை, இயக்குநரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை -16 அவர்களின் அலுவலக கடித எண்.SC.No.46/2025/TNEB/CC-I, Dated:16.10.2025 -ன்படி உத்தரவை பெற்று மனுவின் தன்மைக்கேற்ப வழக்கு பதிவு செய்ய அறிவுறுத்தியதின் பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I-ன் குற்ற எண்.06/2025, பிரிவு-7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (2018)-ல் திருத்தப்பட்டது பிரிவின் கீழ் இன்று (16.10.2025) மாலை 17.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புநர்: V.திருவேங்கடம், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சென்னை-600 001 பெறுநர்: காவல் துணைக் கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. Lr.No. INSPN/303/2025, dated 18.09.2025. அய்யா, பொருள்: கூட்டு தணிக்கை - இருதுறை கூட்டு திடீர் தணிக்கை உதவி செயற்பொறியாளர் (இயக்குதலும் பராமரித்தலும்), தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் அலுவலகம் 110/33-11 KV, போரூர் துணை மின் நிலையம், சென்னை அலுவலகத்தில் உதவி பொறியாளர் (ஊரகம்) மற்றும் உதவி பொறியாளர், போரூர் -II என்ற அலுவலகத்தில் 18.09.2025 அன்று கூட்டு தணிக்கை செய்யப்பட்டது – நடவடிக்கை

எடுக்க அனுப்புதல் தொடர்பாக. பார்வை: சம்மந்தப்பட்ட ஆவணங்கள். சென்னை மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு-1-ன் காவல் துணைகண்காணிப்பாளர் இணைந்து இன்று மாலை 16.30 மணிமுதல் 18.30 மணி வரை, சென்னை-600116, குன்றத்தூர் ரோடு, போரூர், உதவி செயற் பொறியாளர் அலுவலகம், 110/33-11 KV, போரூர் துணை மின் நிலையம் என்ற விலாசத்தில் இயங்கும் உதவி பொறியாளர், போரூர் (ரூரல்), தமிழ்நாடு மின்சார வாரியம் அலுவலகத்தில் இருதுறை கூட்டுத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டுத் தணிக்கையின்போது கைப்பற்றப்பட்ட தொகை ரூ.1,29,300/- மற்றும் கைப்பற்றப்பட்ட பதிவேட்டின் நகல் ஆகியவற்றை மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, இன்று 18.09.2025-ந்தேதி காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-1 ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16 அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கை குறிப்பு தகுந்த மேல் நடவடிக்கைக்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. ஒப்பம் 18.09.2025 (XXXXXX), மாவட்ட துணை ஆய்வுக் குழும அலுவலர், சென்னை. இணைப்பு: சென்னை ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில், சென்னை -600016, குன்றத்தூர் ரோடு, போரூர், உதவி செயற் பொறியாளர் அலுவலகம், 110/33-11 KV, போரூர் துணை மின் நிலையம் என்ற விலாசத்தில் இயங்கும் உதவி பொறியாளர், போரூர் (ரூரல்), தமிழ்நாடு மின்சார வாரியம் அலுவலகத்தில் இன்று 18.09.2025 மாலை 16.30 மணி முதல் 18.30 மணிவரை மேற்கொள்ளப்பட்ட திடீர் கூட்டுத் ஆய்வின் நடவடிக்கைகள். Received the letter and registered a case in V&AC, Chennai City –I Dett., Cr.No.6/2025, u/s.7 of Prevention of Corruption Act (Amendment) Act 2018 Sd/ Tr.A.Immanuel Gnana Sekar, Deputy Superintendent of Police, V&AC, CC-I Dett., Chennai, dated: 16.10.2025. இணைப்பில் உள்ள இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை பின்வருமாறு சென்னை மாவட்டம், துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-1, காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோர் இணைந்து இன்று (18.09.2025)

உதவி செயற்பொறியாளர் (இயக்குதலும் பராமரித்தலும்), தமிழ்நாடுமின் பகிர்மானகழகம் அலுவலகம், 110/33-11 KV, போரூர் துணைமின் நிலையம், சென்னை அலுவலகத்தில் உதவிபொறியாளர் (ஊரகம்) மற்றும் உதவிபொறியாளர், போரூர் -II அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர்கூட்டுத்தணிக்கை.

இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்	1. திரு.V.திருவேங்கடம், துணைஆய்வுக்குழுஅலுவலர், மாவட்டஆய்வுக்குழுஅலுவலர் அலுவலகம், மாவட்டஆட்சியர் அலுவலக வளாகம், சென்னை-600 001. 2. திரு.A. இம்மானுவேல் ஞானசேகர், காவல் துணைக் கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-I, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. 3. திருமதி.P.I.ஜோஸ்லீன் மேரி, காவல்ஆய்வாளர், சென்னைநகரப் பிரிவு-I, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. 4.திருமதி.M.பிரியா, காவல் ஆய்வாளர், சென்னைநகரப் பிரிவு-I, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. 5. திருமதி.V.செல்வி, காவல் ஆய்வாளர், சென்னைநகரப் பிரிவு-I, ஊழல் தடுப்பு மற்றும். கண்காணிப்புத்துறை, சென்னை-16.

சென்னை-600116, குன்றத்தூர் ரோடு, போரூர், உதவி செயற் பொறியாளர் அலுவலகம், 110/33-11KV, போரூர் துணைமின் நிலையம் என்ற முகவரியிலுள்ள தமிழ்நாடு

மின்சாரவாரியம் அலுவலகத்தில் மின் இணைப்புகள் வழங்குவதற்கும் மற்றும் இதர அரசு பணிகளுக்கு பொதுமக்களிடம் சட்டத்திற்கு புறம்பாக கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்பதகுந்த தகவலின் அடிப்படையில் மேற்படி மின்சார வாரியம் அலுவலகத்தில் திரு.திருவேங்கடம், துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், சென்னை, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், சென்னை600 001மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-I, காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர்கள் இணைந்து இன்று(18.09.2025) மாலை சுமார் 16.30 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த மின்சார வாரிய அலுவலக வளாகத்தின் முன்பக்க கட்டிடத்தில் அடிதளத்தில் 110 KV Sub Division முதல் மாடியில் உதவி செயற்பொறியாளர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. அலுவலகத்தின் வடக்கு புறத்தில் உதவி பொறியாளர், போரூர் (ரூரல்), உதவிபொறியாளர், போரூர்-II ஆகிய அலுவலகங்கள் முதல் தளத்தில் இயங்கி வருகிறது. மேலும் இந்த கட்டிடத்தின் தரை தளத்தில் போரூர், மதனந்தபுரம், போரூர் (ஊரகம்) ஆகிய மின் கட்டணம் வசூல் செய்யும் அலுவலகம் உள்ளது. அலுவலகத்தில் இருந்த உதவிபொறியாளர் (ஊரகம்) பதவி வகித்த இளநிலை பொறியாளர் நிலைI திருமதி.A.தாமரைசெல்வி என்பவரிடம் திடீர் கூட்டுத் தணிக்கைக்கு வந்த அலுவலர்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, தங்களை சுய பரிசோதனை செய்து காண்பித்து விட்டு சோதனை தொடங்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த மற்றொரு அறையில் திரு.மோகனரங்கன், போர்மேன், திரு.M.ராஜி, போர்மேன், திரு.ஆரோன், போர்மேன் மற்றும் திரு.E.முத்தையன் ஆகியோர் ஆஜரில் இருந்தனர். உதவி பொறியாளர், போரூர்-II திருமதி.செல்வி என்பவர் ஆஜரில் இல்லை. இருதுறை திடீர் கூட்டாய்வின் போது உதவிபொறியாளர் (ஊரகம்) அலுவலகத்தில் ஆஜரில் இருந்த இளநிலை பொறியாளர் நிலை–I திருமதி.A.தாமரைசெல்வி அவர்களை சோதனை செய்தபோது அவர்களது Hand bag குறித்து கேட்டதற்கு அவரது அலுவலகத்தின் கீழே நிறுத்தியிருந்த TN-12BA 9267 Maruti

Alto K10 என்ற வாகனத்தில் வைத்திருப்பதாக கூறினார். துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலர்களுடன் சென்று கீழே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் வைத்திருந்த அவருடைய கைப்பையை சோதனை செய்த போது HDFC PAYZAPP Green Colour Envelope cover -ன் உள்ளே ரூ.1,00,000/- வைக்கப்பட்டு அந்த கவரானது அவரது SRI Vishal JEWELLERS, Kundrathur, Periya Nagar என்று அச்சிடப்பட்ட நகை கடையில் அளிக்கும் Ladies Bag -ல் வைக்கப்பட்டிருந்தது. மேலும் அதிலேயே Saravana Stores Elite Gold என்று எழுதப்பட்டிருந்த சிறிய Ladies Purse ஒன்றில் ரூ.60/- வைத்திருந்தார், அந்த பணம் குறித்து கேட்ட போது தனது சொந்த செலவிற்காக என்று கூறியதால், அவரது பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேற்படி இளநிலை பொறியாளர் நிலை – I திருமதி.A.தாமரை செல்வி அவர்களிடம் ரூ.1,00,000/- பணத்திற்கான விளக்கம் கேட்ட போது கணவரின் மருத்துவ செலவிற்காக பெசண்ட் நகர் மின்சார அலுவலகத்தல் பணிபுரியும் உதவி பொறியாளர், திரு.பாலா அவர்களிடம் கடனாக கேட்டதின் பேரில் அவர், இன்று (18.09.2025) தனது அலுவலகத்திற்கு நேரில் வந்து மாலை சுமார் 16.20 மணிக்கு கடனாக கொடுத்தாக கூறினார், மேலும் அந்த காரணம் ஏற்கும்படியாக இல்லாத காரணத்தினால் அப்பணம் விசாரணைக்காக துணை ஆய்வுக்குழும அலுவலரால் கைப்பற்றப்பட்டது. திரு. ச. மோகனரங்கன், போர்மேன் அவர்களை சோதனை செய்த போது அவரது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.14,800/-த்தை ஆஜர் செய்தார். அந்த பணத்திற்கான விளக்கம் கேட்ட போது அவரது தந்தை சிகிச்சைக்காக வைத்திருந்த பணம் என்று கூறினார், மேலும் அதற்கான மருத்துவ விவரங்கள் கேட்ட போது அதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்காத காரணத்தினாலும், அவர் கூறிய விளக்கம் திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் அப்பணம் விசாரணைக்காக துணை ஆய்வுக்குழும அலுவலரால் கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் சொந்தபணம் என்றுகூறிய ரூ.220/-ஐ திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திரு.M.ராஜி, ஆக்கமுகவர் (முதல்நிலை) அவர்களை சோதனை செய்தபோது அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூ.14,930/- இருந்தது. மேலும் அந்த

பணத்திற்கான விளக்கம் கேட்டபோது, தனது தாய்மாமன் மகள் நிச்சயதார்த்த விழாவிற்கு ஆடைகள் வாங்குவதற்காக Canara Bank ATM -லிருந்து ரூ.10,000/- எடுத்ததில் செலவு செய்தது போக மீதபணம் ரூ.8,000/- வைத்திருந்தாக கூறினார். மேலும் ரூ.6,000/- தனது வீட்டிலிருந்து எடுத்து வந்ததாகவும் கூறியதால், அவர் ATM -லிருந்து எடுத்ததற்கான ஆதாரம் எதுவும் சமர்ப்பிக்காத காரணத்தினாலும், அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளகூடியதாக இல்லாத காரணத்தினால் அப்பணம் விசாரணைக்காக துணை ஆய்வுக்குழும அலுவலரால் கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் கை செலவிற்காக வைத்திருந்த ரூ.430/-ஐ திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திரு. ஆரோன், Gang Man அவர்களை சோதனை செய்த போது அவரது பர்சில் ரூ.4,700/- இருந்தது. மேலும் அந்த பணத்திற்கான விளக்கம் கேட்டபோது, தான் திரு. பத்மனாபன், ஆக்க முகவர் என்பவரிடம் கடனாக பெற்ற பணம் என்றும், தனது சொந்த ஊரான கன்னியாகுமரி செல்ல வைத்திருந்ததாக கூறினார். அவர் கூறிய விளக்கம் திருப்திகரமாக இருந்த காரணத்தினால் அப்பணம் மீண்டும் துணை ஆய்வுக்குழும அலுவலரால் ஒப்படைக்கப்பட்டது. திரு.கணேசன், வணிக ஆய்வாளர் அவர்களை சோதனை செய்த போது அவரது பர்சில் ரூ.380/- இருந்தது. மேலும் அப்பணத்திற்காக விளக்கம் கேட்ட போது, அவர் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறியதால், அவர் கூறிய விளக்கம் கேட்ட போது, அவர் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறியதால், அவர் கூறிய விளக்கம் ஏற்றுக் கொள்ளகூடியதாக இருந்த காரணத்தினால் துணை ஆய்வுக்குழும அலுவலரால் அப்பணம் திருப்பி அவரிடமே கொடுக்கப்பட்டது. மேலும் சோதனையின் போது அங்கிருந்த போர்மேன் திரு.E.முத்தையன் பின்புற வாசல் வழியாக இறங்கி ஓடிவிட்டார். மேற்படி திடீர் சோதனையின் போது உதவி பொறியாளர் ஊரகம் மற்றும் போரூர் -II அலுவலகங்களின் வருகை பதிவேட்டின் செப்டம்பர்-2025 மாதத்திற்கானது சான்றொப்பமிட்ட நகல்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இரு துறைகூட்டு தணிக்கையின் போது மொத்தம் ரூ.1,29,300/-அதில் 257 X 500= Rs.1,28,500/-, 200 X 1 =Rs. 200/-, 100 X 4 = Rs.400/-, 50 X 2 = 100/- மற்றும் 20 X

5 = Rs.100/- மொத்தம் ரூ.1,29,300/- விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று (18.09.2025) மாலை சுமார் 18.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த இரு துறை கூட்டுத்தணிக்கையின் போது அலுவலக பணிகளுக்கோ, பொதுமக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி உரியமுறையில் முடிக்கப்பட்டது. மேற்படி கூட்டுத் தணிக்கையின் போது (1) திருமதி.A.தாமரைசெல்வி, உதவி பொறியாளர் (ஊரகம்), (2) திரு. ச. மோகனரங்கன், ஆக்கமுகவர், (3) திரு.M.ராஜி, ஆக்கமுகவர் (முதல்நிலை), (4) திரு. ஆரோன், Gang Man மற்றும் (5) திரு.கணேசன், வணிக ஆய்வாளர் ஆகியோர் வாக்குமூலம் பதியப்பட்டது. உதவி செயற்பொறியாளர் திரு. P.பிரபாகரன் அவர்களுக்கு செல்போன் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு, அலுவலகத்திற்கு வரவைக்கப்பட்டு. இருதுறை இணைந்து நடத்திய கூட்டுத்தணிக்கை பற்றிய விவரம் தெரிவிக்கப்பட்டது. (ஒப்பம்/-XXX) 18.09.2025 (திரு.V.திருவேங்கடம்) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சென்னை-600 001 (ஒப்பம்/-XXX) 18.09.2025 (.A.இம்மானுவேல் ஞான சேகர்) காவல் துணைக் கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊ.த.க.துறை, சென்னை-16, (ஒப்பம்/-XXX) 18.09.2025 (P.I ஜோஸ்லீன் மேரி) காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊ.த.க.துறை, சென்னை-16, (ஒப்பம்/-XXX) 18.09.2025 (M.பிரியா) காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊ.த.க.துறை, சென்னை-16, (ஒப்பம்/-XXX) 18.09.2025 (V.செல்வி), காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊ.த.க.துறை, சென்னை-16, (ஒப்பம்/-XXX) 18.09.2025 (A.தாமரை செல்வி) உதவி பொறியாளர் (ஊரகம்), தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் அலுவலகம், 110/33-11 KV போரூர் (ஒப்பம்/-XXX) 18.09.2025 (ச.மோகனரங்கன்) போர்மேன், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் அலுவலகம், 110/33-11 KV போரூர் துணை மின் நிலையம், சென்னை (ஒப்பம்/-XXX) 18.09.2025 (M.ராஜி), போர்மேன், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் அலுவலகம், 110/33-11 KV போரூர் துணை மின் நிலையம், சென்னை (ஒப்பம்/-XXX) 18.09.2025 (P.பிரபாகரன்) உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்

அலுவலகம், 110/33-11 KV போரூர் துணை மின் நிலையம், சென்னை Sd/A. Immanuel Gnana Sekar, Deputy Superintendent of Police, Chennai City –I Dett., Chennai, dated:16.10.2025.

Sir,

Received the above complaint with enclosures, a case was registered in V&AC, CC – I Detachment, Cr.No. 06/2025 u/s.7 of Prevention of Corruption Act (Amendment) Act 2018. The original F.I.R along with complaint enclosed with Joint Surprise Check Proceedings, statements of 1) Tmt.A.Thamarai Selvi, Junior Engineer (First Grade), 2) Thiru.A.Ganesan, Commercial Inspector, 3) Thiru.M.Raji, Special Foreman, 4) Thiru.S.Mohanarangan, Foreman and copies of records are submitted before the Hon'ble Principal District Judge and Special Judge, Thriuvallur District and copies are forwarded to superior officers concerned.

(A.IMMANUEL GNANA SEKAR)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti – Corruption,
Chennai City –I Dett.,
Alandur, Chennai -16.